2018 ஜூன் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

157—

கால்நடைக் கிளை நிலையம்

***13500—திருமதி நா. மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, மிட்டப்பள்ளி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். அருகிலுள்ள கால்நடை நிலையத்திலிருந்து 3 கி.மீ. தூரம் இருத்தல் வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள ஊத்தங்கரை தொகுதி, மிட்டப்பள்ளி கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000-க்கும் குறைவாக, அதாவது 2,140 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால், அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம் அவர்கள்.*

திருமதி நா. மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத்தாரகை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

ஊத்தங்கரை தொகுதியில், மிட்டப்பள்ளி, மூன்றாம்பட்டி, கானம்பட்டி ஆகிய 3 பஞ்சாயத்துகளில் மட்டும் 7,000 கால்நடை அலகுகள் இருக்கின்றன. மிட்டப்பள்ளி பஞ்சாயத்துதான் மையப்

பகுதியில் அமைந்துள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, இதுகுறித்துப் பரிசீலிக்க முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமாக கடந்த ஆண்டு மட்டும் 125 கால்நடை நிலையங்கள் தமிழகம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் 6 கால்நடை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஊத்தங்கரை தொகுதி, நடுப்பட்டியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைக்காமலேயே கால்நடைக் கிளை நிலையம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

முற்பகல் 11-10

ஆகவே, இன்றைக்கு ஊத்தங்கரை தொகுதியைப் பொறுத்தவரை சுமார் 55,700 மாட்டு இனங்கள், 59,500 ஆட்டு இனங்கள் மற்றும் 8,00,000 கோழி இனங்கள் உள்ளன. இந்தப் பகுதியிலே மருத்துவ சேவைகள் வழங்கிட 13 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 2 கால்நடைக் கிளை நிலையங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிட்டப்பள்ளிக்கு கால்நடைக் கிளை நிலையம் வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். துறைரீதியாக அலுவலர்களை அனுப்பி, கால்நடைகளின் எண்ணிக்கையை ஆய்வு செய்து, மீண்டும் ஒரு முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம் அவர்கள்.*

2018 ஜூன் 8]

திருமதி நா. மனோரஞ்சிதம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

158—

தனி வட்டம்

***694—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து, கள்ளிமந்தையத்தைத் தனி வட்டமாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பழனி வருவாய் வட்டத்தில் உள்ள தொப்பம்பட்டி மற்றும் கோரிக்கடவு ஆகிய இரு உள்வட்டங்களையும், ஒட்டன்சத்திரம் வருவாய் வட்டத்தில் உள்ள கள்ளிமந்தையம் மற்றும் தேவத்தூர் ஆகிய இரு உள்வட்டங்களையும் ஆய்வு செய்து, அரசு விதிகளின்படியும், அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களின்படியும் புதிய வருவாய் வட்டம் உருவாக்க உரிய முன்மொழிவுகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிசீலிக்கப்படும் என்று சந்தோஷமாகத்தானே சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.